பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 218

வியாழக்கிழமை
03 ஜூலை 2025

ஆனி 19 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## இலங்கைக்கு 4ஆம் கட்ட கடன் உதவி

கொழும்பு, ஜூலை 3
சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான கடன் திட்டத்தின் நான்காவது மதிப்பாய்வுக்கு அரசாங்கம் ஒப்புதல் வழங்கி 11

## கிருமித்தொற்றால் முதியவர் பலி!

யாழ்ப்பாணம், ஜூலை 3
கோப்பாய் தெற்கில் வசித்துவந்த முதியவர் ஒருவர், கிருமித்தொற்று ஏற்பட்டு நேற்று உயிரிழந்துள்ளார். நடராஜா கேதீஸ்வர 11

## உள்ளகப் பொறிமுறையூடாக பொறுப்புக்கூறல் நடவடிக்கை

### வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 3
உள்ளகப் பொறிமுறை வலுப்படுத்தப்பட்டே பொறுப்புக்கூறல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கான தனது பயணத்தின்போது இங்குள்ள நிலைமைகளை நேரில் 11



பல்லாயிரம் பக்தர்களின் பங்கேற்புடன்

## மருதமடு அன்னைக்கு நேற்றுப் பெருவிழா!

மன்னார், ஜூலை 3
மன்னார் மடுத் திருத்தலத்தின் ஆடிமாதப் பெருவிழா பல்லாயிரம் பக்தர்களின் பங்கேற்புடன் நேற்று பக்தி பூர்வமாக இடம்பெற்றது.
மன்னார் மறைமாவட்ட ஆயர் அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில், மன்னார் மறைமாவட்ட 11

# நீள்கிறது செம்மணிப் புதைகுழி புதிய இடத்தில் அகழ்வுப் பணி

யாழ்ப்பாணம், ஜூன் 3
செம்மணி - சித்துப்பாத்தி மயானத்தில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுவந்த மனிதப் புதைகுழியின் அளவு நீடிக்கப்பட்டுள்ளது. இதன்படி, புதியதொரு இடத்தில் நேற்றுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. 11



## ஒக்ரோபர் மாதம் பட்ஜெட் வரைவு

### நவம்பரில் விவாதங்கள் டிசெம்பரில் வாக்கெடுப்பு

கொழும்பு, ஜூலை 3
2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் ஒதுக்கீட்டுவரைவை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.
இதற்கமைய வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தை நவம்பரில் நடத்து 11

## செம்மணிப் புதைகுழிக்குள் மேலும் நான்கு சிதிலங்கள்

### இதுவரை 38 என்புத்தொகுதிகள் அடையாளம்

யாழ்ப்பாணம், ஜூன் 3
யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழியின் நேற்றைய அகழ்வின்போது சிறுவரின் என்புத் தொகுதி எனச் சந்தேகிக்கப்படும் என்புத் தொகுதி உட்பட, நான்கு புதிய என்புத் தொகுதிகள் அடையாளம் 11

செம்மணிப் புதைகுழி தொடர்பான

## விசாரணைகளுக்கு முழு ஒத்துழைப்பு!

### அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 3
செம்மணிப் புதைகுழி விவகாரம் தொடர்பான வழக்கு விசாரணைக்கு முழுமையான ஒத்துழைப்பை அரசாங்கம் வழங்கும் என்று அமைச் 11

மோட்டார்சைக்கிள்

## ரயிலுடன் மோதுண்டதால் இருவருக்குப் படுகாயம்!



வவுனியா, ஜூலை 3
வவுனியா - ஓமந்தையில் ரயிலுடன் மோட்டார்சைக்கிள் மோதுண்டு விபத்துக்கு உள்ளானதில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.
ஓமந்தை - பறநாட்டான்கல் பகுதியில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் 11

## கொடிகாமத்தில் விபத்து பெண்ணொருவர் பலி!

யாழ்., ஜூலை 3
யாழ்ப்பாணம் - கொடிகாமம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். கனடாவில் 11

## அர்ச்சுனாவின் எம்.பி. பதவி; இடைக்காலத் தடையில்லை!

கொழும்பு, ஜூலை 3
நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிப்பதற்கு இடைக்காலத் தடைகோரப்பட்ட நிலையில், அவ்வாறான உத்தரவுகளைப் பிறப்பிக்க நீதிமன்றம் மறுத் 11




'இப்பிடியே தோண்ட தோண்ட யாழ்ப்பாணம் முழுக்க புதைகுழி விரியும் போல கிடக்கு'

பூநகரி விபத்தில்

## படுகாயமடைந்த ஒருவர் சிகிச்சையின்போது பலி

கிளிநொச்சி, ஜூலை 3
பூநகரி மன்னார் வீதியின் பூநகரி தம்பிராய் பகுதியில் ஜூன் மாதம் 30ஆம் திகதி ஹைஏஸ்ும் மோட்டார் சைக்கிளும் மோதி ஏற்பட்ட விபத்தில், படுகாயமடைந்த 27 வயதுடைய இளைஞர் 12

## சுன்னாகத்தில் கோரவிபத்து இரண்டு இளைஞர்கள் பலி!

### முதல்நாள் வாங்கிய மோட்டார் சைக்கிளில் சென்றபோது விபரீதம்

யாழ்ப்பாணம், ஜூலை 3
புன்னாலைக் கட்டுவனிலிருந்து சுன்னாகம் நோக்கி மோட்டார்சைக்கிளில் அதி வேகமாகப் பயணித்த இரண்டு இளைஞர்கள், வேகக் கட்டுப்பாட்டை இழந்து மின்சாரக்கம்பத்துடன் மோதுண்டு விபத்துக்கு உள்ளானதில் சம்பவ 11


திசாளன்


பிரவீன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 02.07.2025
சீட்டிழுப்பு இலக்கம் 4120
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 10 33 36 64
விசேட எழுத்து O

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி 02.07.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1187
வெற்றி இலக்கினம் கடகம்
வெற்றி இலக்கங்கள் 17 22 37 39

**NLB ஜய**
திகதி 02.07.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0146
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 6 5 8 2

**மெகா பவர்**
திகதி 02.07.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2226
ஆங்கில எழுத்து A
சுப்பர் இலக்கம் 24
வெற்றி இலக்கங்கள் 32 33 57 80

**மஹஜன சம்பத**
திகதி 02.07.2025
சீட்டிழுப்பு இலக்கம் 5878
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 9 6 7 6 8 5

**தன நிதானய**
திகதி 02.07.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1908
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கங்கள் 19 52 72 75
விசேட எழுத்து H

**அத சம்பத**
திகதி 02.07.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0453
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 7 6 8 5

# தமிழினப்படுகொலை நடந்ததை சர்வதேசம் அங்கீகரிக்கவேண்டும்

## கனேடியத் தேசியத் தமிழரவை தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 3**

**செம்மணி மனிதப் புதைகுழியில் எலும்புக்கூடுகள் மீட்கப்படுகின்றமை தமிழினப்படுகொலை நடந்துள்ளது என்பதைச் சர்வதேசம் அங்கீகரிக்கவேண்டும் என்ற பொறுப்புக்கூறல் மற்றும் பரிகார நீதிக்கான வேண்டுகோள்களைப் புதுப்பிக்கின்றது என்று கனேடியத் தேசியத் தமிழர் அவை தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பாக கனேடியத் தேசியத் தமிழர் அவை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் ட்ரக் இலங்கைக்கான தனது பயணத்தின் ஒரு பகுதியாக யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டார். அவர் தமிழ் மக்கள் காணாமல் போனதுடன் தொடர்புடைய செம்மணி மனித புதைகுழிக்கும் சென்றிருந்தார்.

இராணுவக் கோப்ரல் சோமரட்ண ராஜபக்சவின் வாக்குமூலத்தின் பின்னர் இந்த மனிதப் புதைகுழி முதலில் 1998ஆம் ஆண்டு உறுதிப்படுத்தப்பட்டது.

இந்த விசாரணையில் ராஜபக்ச செம்மணியில் காணாமற்போன 300 முதல் 400 வரையிலான தமிழர்களின் உடல்கள் புதைக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்திருந்தார்.

இதுதொடர்பில் ராஜபக்ச மிகவும் திட்டவட்டமான தகவல்களை வெளியிட்டிருந்தார்.

அவர் கடத்தல், சித்திரவதை, கொலைகளில் உயர் அதிகாரிகளுக்குத் தொடர்புள்ளது என்றும் குற்றஞ்சாட்டியிருந்தார்- என்றுள்ளது. (எ-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி 02.07.2025
தினம் புதன்கிழமை
வெற்றி வாரம் 0586
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கம் 0 2 5 2 0 2

**Super Ball**
திகதி 02.07.2025
தினம் புதன்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2852
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கம் 12 36 38 40

**சனிதா**
திகதி 02.07.2025
தினம் புதன்கிழமை
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கம் 40 41 43 74
வெற்றி வாரம் 5013

**லக்ன ராசி**
திகதி 02.07.2025
தினம் புதன்கிழமை
விருச்சிகம் ♏
வெற்றி இலக்கம் 07 15 28 35
சீட்டிழுப்பு வாரம் 4564

**KAPRUKA**
திகதி 02.07.2025
தினம் புதன்கிழமை
ஆங்கில எழுத்து S
சுப்பர் இலக்கம் 09
வெற்றி இலக்கம் 02 14 55 56
வெற்றி வாரம் 2028

**அத கோடிபதி**
திகதி 02.07.2025
தினம் புதன்கிழமை
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கம் 04 25 71 72
வெற்றி வாரம் 2678

**JAYODA**
திகதி 02.07.2025
தினம் புதன்கிழமை
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கம் 35 36 59 61
வெற்றி வாரம் 2140

# இலங்கையில் ஸ்டார்லிங்

கொழும்பு, ஜூலை 3




ஸ்டார்லிங் சேவை தற்போது இலங்கையில் அதிகாரபூர்வமாகக் கிடைக்கும் என்று அதன் உரிமையாளர் எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

தனது சமூக ஊடகத் தளமான 'எக்ஸ்' தளத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது நாட்டில் அதிவேக செயற்கைக்கோள் இணைய சேவையை உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்துகிறது. (ச-இ)

## வவு.மாநகரசபை அமர்வில்

# முகநூல் வாதத்தால் வீணடிக்கப்பட்ட நேரம்!

வவுனியா, ஜூலை 3

வவுனியா மாநகரசபையின் முதல் அமர்வில் போலி முகநூல் கணக்குத் தொடர்பாகவே கடும் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

சபை உறுப்பினர் பிரேமதாஸ் தனது உரையில் போலி முகநூல் ஒன்றினூடாக தானும் தனது மனைவியும் அவதூறுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதற்குக் காரணமான ஒருசிலர் இந்தச் சபையில் இருக்கின்றனர் என்றும் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இதனால் ஆத்திரம் அடைந்த சபைமுதல்வர் காண்டீபன் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை இங்கு சுமத்த வேண்டாம். ஆதாரம் இருந்தால் அதனைச் சபையில் சமர்ப்பிக்குமாறு தெரிவித்தார்.

தங்களுக்கான ஆதரவை வழங்காதமையினாலேயே அந்த முகநூலில் என்னை அவதூறுக்கு உட்படுத்தினார்கள். எனவே அளவானவர்கள் தொப்பியைப் போட்டுக்கொள்ளுமாறு பிரேமதாஸ் தெரிவித்திருந்தார். இதனால் அவருக்கும் முதல்வருக்கும் இடையில் கடும் வாதப்பிரதிவாதங்கள் அன்றைய அமர்வில் நீண்டநேரம் இடம்பெற்றன. (ச-110)

# சர்வதேச தரத்தில் பிறப்புச் சான்றிதழ்

## யாழில் கையளிப்பு

**யாழ்ப்பாணம், ஜூலை 3**

**சர்வதேச தரத்திலான தேசிய பிறப்புச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்.மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் வடக்கு வலயப் பிரதிப் பதிவாளர் நாயகம் ப.பிரபாகர் தலைமையில் நடைபெற்றது.**

**நிகழ்வில் யாழ். மாவட்டச் செயலாளர் மருதலிங்கம் பிரதீபன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு தேசிய பிறப்புச் சான்றிதழை வழங்கினார்.**

நிகழ்வில் மாவட்ட மேலதிக செயலாளர் கே. சிவகரன், பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், பிரதிப் பதிவாளர் நாயகம், காணிப் பதிவாளர், மாவட்ட மற்றும் பிரதேச செயலகப் பதிவாளர்கள், கிராமியப் பிரதேசப் பதிவாளர்கள், பெற்றோர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-66)



# பெயர்களுக்கு ஏற்றவாறு சட்டம் இனி வளையாது!

## அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 3



ராஜபக்சக்களா, ரணில் விக்கிரமசிங்கவா என்பது முக்கியம் அல்ல. தவறிழைத்தவர்கள் யாராக இருந்தாலும் சட்டத்தின் பிரகாரம் தண்டனையை எதிர்கொள்ள நேரிடும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ராஜபக்சவா, ரணில் விக்கிரமசிங்கவா அல்லது ரணதுங்கவா என்ற வேறுபாடு எம்மிடம் கிடையாது. ராஜபக்சக்கள் தொடர்பிலும் வழக்கு விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன.

ஷிராந்தியின் அண்ணன், யோசித ராஜபக்ச, நாமல் ராஜபக்ச ஆகியோர் தொடர்பிலும் விசாரணைகள் இடம்பெறுகின்றன. நீதிமன்றம் அது தொடர்பில் தீர்ப்புகளை வழங்கும். சட்டம் தனது கடமையைச் செய்யும். இந்த விடயத்தில் நாம் தலையிடப்போவதில்லை- என்றார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### இலங்கையில்

# இணையப் பயன்பாட்டில் 70 இலட்சம் பேர்

**கொழும்பு, ஜூலை 3**
**இலங்கையில் தற்போது சுமார் 70 இலட்சம் பேர் இணையத்தைப் பயன்படுத்துகின்றனர் என்று கணினி அவசர பதிலளிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.**

இவர்களில் 90 வீதமானவர்கள் சமூக ஊடகங்களில் செயற்பாட்டில் இருப்பவர்கள். கடந்த 3 மாதங்களில் போலிக்கணக்குகள், ஹேக் செய்யப்பட்ட கணக்குகள், வட்ஸ் அப் மோசடிகள் போன்ற முறைப்பாடுகள் அதிகரித்துள்ளன.
சமூக ஊடகங்கள் காரணமாக 21 வீதமான பயனாளர்கள் மனஅழுத்தம் அடைந்துள்ளனர். இதில் 10 வீத ஆண்களும் அடங்குகின்றனர். பலர் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதை நிறுத்தமுடியாமல் தவிக்கின்றனர்.
அதேவேளை சட்ஜிபிடி போன்ற செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பங்கள் தற்போது இலங்கையில் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் பல நன்மைகள் இருப்பினும், அவை தவறாகப் பயன்படுத்தப்படுவதற்கும் வாய்ப்புள்ளது.
சிலர் செயற்கை நுண்ணறிவு ஏ.ஐ. தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, சாதாரண புகைப் படங்களைத் தொகுத்துப் போலியான மோசமான படங்களை உருவாக்கும் செயலில் ஈடுபடுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## இன்று முதல் நெல் கொள்வனவு

கொழும்பு, ஜூலை 3
இன்று முதல் நெல்லைக் கொள்வனவுசெய்ய நெல் சந்தைப்படுத்தல் சபை தயாராகவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
புதிய விலைகளில் நெல் சந்தைப்படுத்தல் சபை நெல்லைக் கொள்வனவு செய்யும் என விவசாயப் பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார். அதன்படி ஒரு கிலோகிராம் நாடு நெல் வகை 120 ரூபாவுக்கும் ஒரு கிலோகிராம் சம்பா 125 ரூபாவுக்கும் ஒரு கிலோகிராம் கீரிச் சம்பா 132 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படவுள்ளது. (ச-113)




## மதுபான உற்பத்திக்காக இறக்குமதியாகும் அரிசி

கொழும்பு, ஜூலை 3
மதுபான உற்பத்திக்காக அரிசி இறக்குமதிசெய்ய அனுமதிக்கப்படும். இதற்கான வசதிகள் செய்துகொடுக்கப்படும் என்று விவசாயம், நீர்ப்பாசனம், காணி மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சர் கே.டி. லால் காந்த தெரிவித்துள்ளார்.
இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
மதுபான உற்பத்திக்காக இறக்குமதி செய்யப்படும் அரிசி தொடர்பான பிரச்சினையைத் தீர்க்க ஒரு பயனுள்ள வழிமுறை வகுக்கப்படும். சீரற்ற கால நிலை காரணமாக நெல் உற்பத்தி இலக்கை அடையமுடியவில்லை. இது நுகர்வோரைப் பாதிக்கலாம். ஆயினும் அரசாங்கம் நுகர்வோருக்கு நெருக்கடி ஏற்படுவதை அனுமதிக்காது. நாட்டின் அரிசித் தேவை அரிசி இறக்குமதியால் நிரப்பப்படும் - என்றார். (எ-இ)

## மருதங்கேணியில் வெடிபொருள்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 3
மருதங்கேணிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முள்ளியடி வெற்றிலைக்கேணிப் பகுதியில் தனியார் காணியொன்றிலிருந்து வெடிக்காதநிலையில் வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.
காணி உரிமையாளர் தனது காணியை நேற்றுப் புதன்கிழமை துப்புரவு செய்தபோது மண்ணுள் புதையுண்டநிலையில் அவை அவதானிக்கப்பட்டன.
அதனையடுத்து மருதங்கேணிப் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கமைவாக சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் நீதிமன்ற அனுமதியைப் பெற்று அவற்றைச் செயலிழக்கச் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.
இதன்போது மூன்று குண்டுகளும் அமுக்க வெடியொன்றும் மீட்கப்பட்டன. (ச-113)



### டெங்கு ஒழிப்பு வாரம்

## இதுவரை 553 பேருக்கு சிவப்பு அறிவித்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 3
டெங்கு ஒழிப்பு வாரத்தின் இரண்டாவது நாளான நேற்றுமுன்தினம் 22 ஆயிரத்து 294 வளாகங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்ட நிலையில் அதில் 553 பேருக்கு சிவப்பு அறிவிப்புகள் வழங்கப்பட்டுள்ளன.
நுளம்புகள் உருவாகக்கூடிய 4 ஆயிரத்து 965 இடங்களும், நுளம்புக் குடம்பிகள் இருந்த 657 இடங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன என்றும் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் விசேட மருத்துவர் பிரஷிலா சமரவீர தெரிவித்துள்ளார். (ச-இ)

## ஒரேயொரு ஆஸ்பத்திரியில ஒரேயொரு மணித்தியாலம்

கிளிநொச்சியில பிரமந்தனாறு எண்டொரு இடமிருக்கு. அங்க ஒரு சின்ன ஆஸ்பத்திரி இருக்கு. அந்தச் சின்ன ஆஸ்பத்திரியைத்தான் பிரமந்தனாறில இருக்கிற சனங்களும், அந்த ஊரைச் சுத்தி இருக்கிற மயில்வாகனபுரம், கல்லாறு, புன்னைநீராவி, கண்ணகிநகர் பகுதியளில இருக்கிறவையும் நம்பி இருக்கினம். ஏதும் வருத்தம் எண்டால் கிட்ட உள்ள இந்த ஆஸ்பத்திரிக்கு அவை போனால், அங்க டொக்டர் இருக்கமாட்டார். ஒவ்வொருநாளும் மத்தியானம் பன்னிரெண்டு மணியில இருந்து ஒரு மணி மட்டும் (ஒருமணித்தியாலம்தான் ) அந்த ஆஸ்பத்திரியில டொக்டரைக் காணமுடியும். இப்பிடி ஒருமணித்தியாலம் மட்டுமே நிக்கிற டொக்டரிட்ட தங்கட வருத்தத்தைக் காட்டி மருந்து எடுக்கிறதுக்காக விடியக்காலமையில இருந்தே சனங்கள் காவல் இருப்பினம். ஒவ்வொருத்தரும் தாங்கள் வந்த ஒழுங்கில நம்பர் துண்டு எடுத்து, வெயிட் பண்ணுவினம். அவையள் அப்பிடி விடியவெள்ளனவே வந்து துண்டு எடுக்காட்டி , பின்னுக்குத்தான் நம்பர் கிடைக்கும். அப்பிடிப் பின்னுக்கு நம்பர் கிடைச்சால், முன்னுக்கு உள்ளவை போய் அவையின்ர வருத்தத்தைப் பாக்கவே டொக்டருக்கு நேரம் போயிடும். அதால பின்னுக்கு நிக்கிறவை அடுத்தநாள்தான் வரோணும். இல்லாட்டி ஏழெட்டுக் கிலோமீற்றருக்கு அங்கால இருக்கிற தர்மபுரம் ஆஸ்பத்திரிக்குத்தான் உந்த வருத்தம்வாதையோட போகோணும்.

பிரமந்தனாறு ஆஸ்பத்திரி இப்ப மருத்துவப் பராமரிப்பு அலகு எண்ட பிரிவுக்குள்ள வாறதால, அங்க கிழமை நாட்களில் காலமை 8 மணிதொடக்கம் 12 மணி வரைக்கும், பின்னேரம் 2 மணி தொடக்கம் 4 மணி வரைக்கும், சனிக்கிழமையளில காலமை மட்டும் அந்த ஆஸ்பத்திரியில டாக்குத்தர்மார் வந்து சேவை செய்யோணும். அதுதான் ரூல்ஸ். அப்பிடியிருக்க, ஏனிப்பிடி ஒருமணித்தியாலம் மட்டும் இஞ்ச டாக்குத்தர் வாறார் எண்டு சனங்களும், மேலதிகாரிமாரிட்ட கேட்டிருக்கினம். அதுக்கு - டாக்குத்தர்மாருக்கு கடும் தட்டுப்பாடு. அதால உந்த ஆஸ்பத்திரிக்கெண்டு ஒரு டொக்டரும் இன்னும் போடுப்படேலை. எண்டாலும் சனங்கள் பாவம் எண்டதால தர்மபுரம் ஆஸ்பத்திரியில இருக்கிற டொக்டர்தான், பிரமந்தனாறு ஆஸ்பத்திரிக்கும் ஒவ்வொருநாளும் ஒரு மணித்தியாலம் போறார்- எண்டு மேலதிகாரிமார் பிலாக்கனம் பாடுகினம்.

2021 ஆம் ஆண்டு உந்தப் பிரமந்தனாறு ஆஸ்பத்திரி கட்டுப்படேக்க, அங்கத்தைச் சனங்களுக்கு கடும் புளுகம். "இனி மேல் வருத்தம் வந்தால், தர்மபுரத்துக்கோ கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கோ அலையத்தேவையில்லை, இஞ்சையே காட்டி மருந்தெடுக்கலாம்" எண்டுதான் நினைச்சவை. ஆனால், இப்ப அந்த ஆஸ்பத்திரி இருந்தும் இல்லாதமாதிரித்தான். டொக்டர் நிக்கிற அந்த ஒரு மணித்தியாலத்தில மிஞ்சிமிஞ்சிப் போனால் பத்துப் பதினைஞ்சு பேருக்குத்தான் அவர் வருத்தம் பாக்கமுடியும். ஆனால் ஒவ்வொரு நாளும் அம்பது அறுபது பேராவது மருந்தெடுக்க அங்க வந்து, டொக்டரிட்ட வருத்தத்தைக் காட்ட ஏலாமல், கடைசியில காத்திருந்து நேரம் போனபிறகு தர்மபுரம் ஆஸ்பத்திரிக்கோ, கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கோதான் போகினம். மேல்மட்டங்களில இருக்கிற புண்ணியவான்கள் கொஞ்சம் கடைக்கண்ணைத் திறந்து, பிரமந்தனாறு ஆஸ்பத்திரிக்கு ஒரு டொக்டரைப் போட்டு அங்கத்தைச் சனத்தின்ர வயித்தில பாலை வார்க்கமாட்டினமோ?

padsi@uthayan.com
- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தையின் நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்வீர்கள். மனதில் தன்னம்பிக்கை அதிகரிப்பதுடன் உற்சாகமும் பெருக்கெடுக்கும். எதிர் காலத்துக்குப் பயன்தரும்வகையில் முக்கிய பிரமுகர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**இடபம்:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் திடீர்ச்செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. குடும்ப விஷயமாக சிலருக்கு வெளியூர்ப்பயணம் மேற்கொள்ளநேரும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாகமுடியும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். சிலருக்கு வீண் அலைச்சல் ஏற்படவும் அதனால் உடல் அசதி உண்டாகவும் கூடும்.

**கடகம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாகமுடியும். வாழ்க்கைத்துணையின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். சகோதரர்களால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். அலுவலகத்தில் உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**சிம்மம்:** தாய்வழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தருவார். அவர்மூலம் உங்களுக்குத் தேவையான உதவிகளும் கிடைக்கும். அலுவலகத்தில் உங்கள் ஆலோசனையை அதிகாரிகள் ஏற்றுக்கொள்வார்கள்.

**கன்னி:** சகோதரர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மாலையில் உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படக்கூடும். புதிய டிசைனில் ஆடைகள் வாங்கி மகிழ்வீர்கள். நண்பர்கள் உதவிகேட்டு வருவார்கள். பிற்பகலுக்குமேல் மற்றவர்களுடன் பேசும்போது பொறுமை அவசியம்.

**துலாம்:** திடீர்ச்செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். கடன்கள் விஷயத்தில் கவனம் தேவை. மற்றவர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**விருச்சிகம்:** மனதில் இனந்தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். நண்பர்கள் உங்கள் தேவையை அறிந்து உதவி செய்வார்கள். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். தந்தைவழியில் ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். அலுவலகத்தில் புதிய பொறுப்பு ஒன்றை ஏற்கவேண்டிவரும்.

**மகரம்:** சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு ஏற்படும். பயணத்தின்போது கவனமாக இருக்கவும். வியாபாரத்தில் வழக்கமான நிலையே காணப்படும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபட வேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்குக் குடும்பம் தொடர்பான பணிகளுக்காக வெளியூர்ப்பயணம் மேற்கொள்ள நேரிடும். சிலருக்கு தாய்வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மீனம்:** மகிழ்ச்சியான நாள். மன உறுதியுடன் செயற்படுவீர்கள். எதிர்பாராத பணலாபம் உண்டாகும். கடன்களில் ஒரு பகுதியைத் தந்து முடிக்கும் வாய்ப்பு ஏற்படும். பிற்பகலுக்குமேல் உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உண்டாகும்.





# சர்வதேச தமிழ்ப் பண்பாட்டு மாநாடு; ஆரம்ப விழாவில் 24 பேருக்கு விருது

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறையுடன் தஞ்சாவூர் அனைத்துலகப் பண்பாட்டு ஆய்வுமையம், தமிழ்நாடு திருநெறி தமிழ் சைவ சமயப் பாதுகாப்புப் பேரவை, லண்டன் தமிழ்க் கல்வியகம், லண்டன் உலகச் செம்மொழித் தமிழ்ச்சங்கம், பிரான்ஸ் இந்திய வம்சாவளி மக்களுக்கான அமைப்பு ஆகியன இணைந்து நடத்திய சர்வதேச தமிழ்ப் பண்பாட்டு மாநாட்டின் ஆரம்ப விழா கடந்த திங்கட்கிழமை யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெற்றது.

இதன்போது வாழ்நாள் சாதனையாளர் சர்வதேச விருது 11 பேருக்கும், உலக சாதனைச் செம்மல் விருது 8 பேருக்கும், உலக இளம் சாதனைச் செம்மல் விருது 5 பேருக்கும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. தொடர்ந்து மூன்று நூல்கள் வெளியீடும், கலை நிகழ்ச்சிகளும், கருத்தரங்க நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ச-41-66)



நீர்வேலிக் கந்தசுவாமி கோயிலில் ஆனி உத்தரத்தை முன்னிட்டு கடந்த செவ்வாய்க்கிழமை முருகப் பெருமான் திருமஞ்சத்தில் எழுந்தருளி வீதிவலம் வந்தார். (ச-17)

# பரிசளிப்பு விழாவும் திறப்புவிழாவும்

யாழ்ப்பாணம், ஜூலை 3


யாழ். வீமன் காமம் மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும் திறன் வகுப்பறை திறப்புவிழாவும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9மணியளவில் சிவராசா மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

வித்தியாலயத் தலைவர் திருமதி பிரதா கிரிதரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலிகாமம் கல்வி வலய கல்வி நிர்வாகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாகலிங்கம் சிவனேசன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய கணித ஆசிரிய ஆலோசகர் கணேசரத்தினம் ஆதீத்தன், கௌரவ விருந்தினர்களாக பழையமாணவர் சீவரத்தினம் சிவச்செல்வச்சந்திரன், சன் றிச் பிஸ்கட் கம்பனியின் முகாமையாளர் கேசவன் செந்தில்ராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். நிகழ்வில் இளவரசர்.ஷ.இ.ஞானஸ்கந்தக்குருக்கள் மாவை. ஆதீனப் பேரரசு மாவை ஆதீனம் பிரதான சிவாச்சாரியார் ஆசியுரையையும் சிவில் இஞ்சினியரும் பழையமாணவருமான ஆறுமுகதாசன் திருமூலன் நினைவுப் பேருரையையும் ஆற்றுவர். (ச-41)



நோயாளர்களுடன் தொடர்பாடல்களை மேம்படுத்துவது தொடர்பில் சுகாதார ஊழியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் பதில் பொறுப்பு மருத்துவ அதிகாரி மருத்துவர் கோ.ரஜீவ் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இதில் வளவாளர் ரமணன் ஸ்ரீஸ்கந்தனால் தெளிவூட்டல் வழங்கப்பட்டது. (ச-28)



வடகோவை இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (ச-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




## கச்சதீவும் களமாடல்களும்

'இலங்கைக்கு கச்சதீவை தாரைவார்த்துக்கொடுத்தது காங்கிரஸூம், தமிழகத்தை ஆளும் தி.மு.க.வும்தான்' என்று குற்றஞ்சாட்டியிருக்கின்றனர் அ.தி.மு.க.வினர். அ.தி.மு.க.வினரும், பா.ஜ.க.வினரும் தற்போது தேர்தல் கூட்டணியை அமைத்துள்ளநிலையில், இவ்விரு தரப்பினரும் தமக்குப் பாதகமில்லாத விடயங்களை ஊதிப்பெருப்பித்து அவற்றை வாக்குகளாக மாற்றவே எத்தனித்துவருகின்றனர். அத்தகைய வியூகங்களில் ஒன்றாகத்தான் கச்சதீவு விவகாரமும் அமைந்துள்ளது. 2026 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தல் தமிழக அரசியலில் தீர்க்கமான ஒன்றாக மாறிவிட்டதால், இனிவரும் நாள்களில் - வாரங்களில் - மாதங்களில் கச்சதீவு விவகாரம் சூடுபிடிக்கும். தேர்தலுக்கு மிகச்சொற்ப நாள்களே மிஞ்சியிருக்கும் காலப்பகுதியில், தமிழகத்தின் முழுநேர அரசியலாக கச்சதீவு விவகாரம் மாற்றம்பெறவும் சாத்தியங்கள் மிக அதிகம்.

ஆக, தமிழக அரசியல் தலைமைகள் அனைவரும் ஒருவிடயத்தை பொதுப்பாடாக ஏற்கின்றனர். அது, 'கச்சதீவு இந்தியாவிடம் இருந்திருக்கவேண்டும்' என்பதே. கச்சதீவு இலங்கையிடம் வழங்கப்படாமல் இந்தியாவிடம் இருந்திருந்தால், இன்று தமது மீனவர்களின் அத்துமீறல்களுக்கு சட்டபூர்வமான அங்கீகாரம் கிடைத்திருக்கும். மாறாக, கச்சதீவை இலங்கைக்குக் கொடுத்ததால், அத்துமீறிய மீன்பிடியானது இப்போது கைதுகளுக்கும் - கண்டனங்களுக்கும் - தண்டங்களுக்கும் உரியதாக அமைந்துவிட்டது என்பதுதான் தமிழகத் தலைவர்களின் விவாத மையப்புள்ளி. தமிழக மீனவர்கள் இலங்கைக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுகின்றமையால் ஈழ மீனவர்கள் குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டு மீனவர்கள் பொருளாதாரப் பாதிப்பையும் வருவாய் இழப்பையும் சந்தித்து வருகின்றனர். இந்தியாவின் இயந்திரப் படகுகளால் குடாநாட்டு மீனவர்களின் இலட்சக்கணக்கான பெறுமதியுடைய வலைகள் அறுத்தெறியப்படுகின்றமை இன்று நேற்று இடம்பெறும் சம்பவங்களல்ல. எனவே, ஈழத்தமிழ் மீனவர்களின் சொத்துகளுக்கும், வாழ்வாதாரத்துக்கும் ஏற்படும் அழிவுகளைக் கருத்திற்கொண்டு, 'இலங்கைக்குள் எல்லை தாண்டாதீர்கள்' என்று சொல்வதற்குப் பதிலாக, 'கச்சதீவு இருந்திருந்தால் இது சட்டபூர்வமான மீன்பிடிதானே' என்ற எண்ணம் மீனவர்களிடத்தில் விதைக்கப்படுவது மிக ஆபத்தான நோக்கத்தின் பாற்பட்ட செயல்களே.


கச்சதீவு விவகாரம் இந்தியாவில் முழுநேர அரசியலுக்கு உரியதாக மாறிவிட்டதால், ஈழத்தமிழ் மீனவர்களைப் பாதுகாக்கும் பெரும்பொறுப்பு ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு உரியதாக அமைகின்றது. இதற்கு முன்னர் இருந்த அரசாங்கங்கள், கச்சதீவு விவகாரத்தில் இராஜதந்திர நடவடிக்கையை எடுப்பதாகக் கூறிக்கூறியே காலத்தைக் கடத்தின. இந்தத் தாமதம் ஈழ மீனவர்களின் வாழ்வாதாரத்தில் மட்டுமல்லாமல், இலங்கையின் பொருளாதாரத்திலும் நேரடித்தாக்கத்தை ஏற்படுத்தியது. தற்போதைய கடற்றொழில் அமைச்சர் பல நம்பிக்கையான கருத்துகளைக் கூறுகின்றபோதிலும், அத்துமீறல்கள் தொடர்ந்துகொண்டேதான் உள்ளன. எனவே, இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கட்டுப்படுத்துவதற்கு தனது உச்ச அதிகாரங்களை இலங்கை பயன்படுத்தவேண்டும். ஏனெனில், இது இலங்கையின் இறைமையுடன் நேரடித்தொடர்புடைய விடயமுமாகும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



நாளொரு நல்வார்த்தை

உங்கள் மனப்போக்கைவிட அதிக பாதிப்பை தருவது வேறு எதுவும் இல்லை.

– ஜோன் மேனார்ட் கீன்ஸ் –




## ஊழல் ஒழிப்புக்கு ஜப்பான் நிதியுதவி



கொழும்பு, ஜூலை 3

**ஊழல் ஒழிப்பு வழிமுறைகளை வலுப்படுத்தவும், பொது நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை ஊக்குவிக்கவும் ஐக்கிய நாடுகள் சபையின் மேம்பாட்டுத் திட்டத்துடன் இணைந்து மூன்று ஆண்டுத் திட்டத்தை செயற்படுத்துவதற்காக ஜப்பான் அரசு 2.5 மில்லியன் டொலர் வழங்கியுள்ளது.**

ஊழல் எதிர்ப்புப் பொறிமுறையை நிறுவுவதன்மூலம் ஊழல் நடைமுறைகளைக் கையாள்வதற்கான ஒரு பொறிமுறையை நிறுவுவது தொடர்பாக இந்தத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் அகியோ இசோமாட்டா மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான மேம்பாட்டுத் திட்டத்தின் வதிவிடப் பிரதிநிதி அசுசா குபோடா ஆகியோர் நேற்றுமுன்தினம் இலங்கையில் உள்ள ஜப்பான் தூதரகத்தில் நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார வழக்கறிஞர் முன்னிலையில் இதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர். (எ-இ)



## ஒற்றைத் தலைவலி நோயாளிகள் உயர்வு

கொழும்பு, ஜூலை 3

ஒற்றைத் தலைவலி நோயாளிகளின் எண்ணிக்கை சமீபகாலமாக அதிகரித்துவருகின்றது என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த நாள்களில் நிலவும் வெப்பமான வானிலை காரணமாக இந்த நிலைமை பதிவாகியுள்ளது என்று நரம்பியல் நிபுணர் மருத்துவர் காமினி பதிரானா தெரிவித்துள்ளார். (ச-இ)



## போதைப்பொருள் விற்பனை தம்பதியர் கைது

மட்டக்களப்பு, ஜூலை 3

போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கணவனும், மனைவியும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வாழைச்சேனைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வைத்து அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச-இ)

## போலி டொலருடன் ஒருவர் கைது

கொழும்பு, ஜூலை 3

ஆறு போலி டொலர் நாணயத்தாள்களுடன் மினுவாங்கொடைப் பொலிஸாரால் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மினுவாங்கொடைப் பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். (ச-இ)

## வனவிலங்கு வேட்டையாடல் 1992 க்கு முறையிடுங்கள்




கொழும்பு, ஜூலை 3

சட்டவிரோதமாக வனவிலங்குகளை வேட்டையாடுபவர்கள் தொடர்பில் 1992 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து முறைப்பாடளிக்கலாம் என வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த அவசர தொலைபேசி இலக்கமானது 24 மணிநேரமும் சேவையில் இருக்கும். வனவிலங்குகள் வேட்டையாடப்படுவதைக் கட்டுப்படுத்துவதற்காக இந்த அவசர தொலைபேசி இலக்கம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

நாளை

வெள்ளிக்கிழமை - ஆனி 20

04.07.2025

சுபநேரம் : 05.57- 07.27

ராகுகாலம் : 10.27-11 .57


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகள் மூடல் தடுக்கப்படவேண்டும்

## வடக்கு ஆளுநர் சுட்டிக்காட்டு


**யாழ்ப்பாணம், ஜூலை 3**

**அன்று அதிக மாணவர்களைக்கொண்டு இயங்கிய பாடசாலைகள்கூட இன்று இயங்கமுடியாமல் மூட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இந்த நிலை மாறவேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

யாழ். கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியால்ய நிறுவுநர் நினைவு நாளும், பரிசளிப்பு விழாவும் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றன. இந்தநிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், போர், இடப்பெயர்வுக்கு முன்னர் பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கையில் எப்படியொரு சமநிலை இருந்ததோ அதைப் போன்றதொரு நிலையை உருவாக்க அனைவரும் ஒத்துழைக்கவேண்டும்.

வலிகாமம் வடக்குப் பிரதேசம் யாழ்.மாவட்டத்தில் யுத்தம் காரணமாக மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசம். மக்களின் காணிகள் இன்னமும் விடுவிக்கப்பட வேண்டியுள்ளன. பல குடும்பங்கள் இங்கு வந்து மீளக் குடியமரவேண்டியிருக்கின்றார்கள். விடுவிக்கப்பட்ட பகுதிகளில்கூட மக்களை இன்னமும் குடியமர்த்தவேண்டிய தேவை இருக்கின்றது. யாழ்.நகரப் பகுதியை நோக்கிப் போரால் இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் அந்தப் பகுதிக்குச் செல்வதற்கு விரும்பவில்லை. வலிகாமம் வடக்கைப் பொறுத்தவரை பாடசாலைகளில் வளப் பற்றாக் குறைகள்இருக்கின்றன. அதனை நிவர்த்தி செய்யவேண்டிய பொறுப்பு எங்களுக்கு இருக்கிறது. இந்த வருடம் நிதி ஒதுக்கப்பட்டுவிட்டமையால் அடுத்த வருடம் கிடைக்கும் நிதியில் இந்தப் பகுதிப் பாடசாலைகளின் கோரிக்கைகளை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். - என்றார். (ச-66,113)



# அதிபரை நியமிக்காது பாடசாலையை மூடாதீர்

## மாத்தளன் றோ.க.த.க.பாடசாலை பெற்றோர் கவனவீர்ப்புப் போராட்டம்

முல்லைத்தீவு, ஜூலை 3

முல்லைத்தீவு மாத்தளன் றோமன் கத்தோலிக்க அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு அதிபர் இதுவரை நியமிக்கப்படவில்லை. இந்தப் பாடசாலையை மூடுவதற்கான நடவடிக்கையாகவே இதனைப் பார்க்கவேண்டியுள்ளது என்று தெரிவித்து பெற்றோர், மாணவர்கள் இணைந்து நேற்று முன்தினம் பாடசாலைக்கு முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கையில்,

குறித்த பாடசாலைக்கு கடந்த ஆறு மதங்களுக்கு மேலாக அதிபர் இல்லாதநிலை காணப்படுகின்றது. இதுதொடர்பில் வலயக்கல்வி அலுவலகத்துக்குச் சென்று கோரிக்கையை முன்வைத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. வடக்கு மாகாண ஆளுநரிடம் அதிபரை நியமிக்க கோரிக்கை முன்வைத்தபோதும் அவர் இரண்டு வாரங்களில் பாடசாலைக்கு அதிபரினை நியமிப்பதாகத் தெரிவித்த நிலையில் இன்று நான்கு மாதங்கள் கடந்துவிட்டன. எனினும் அதிபர் நியமிக்கப்படவில்லை.

மாத்தளன் றோமன் கத்தோலிக்க அர[illegible]னர் தமிழ்க்கலவன் பாடசாலையில் தற்போது 50க்கும் குறைவான மாணவர்களே கல்வி கற்றுவருகின்றார்கள். போருக்கு முன்னர் இந்தப் பாடசாலையில் 150 வரையான மாணவர்கள் கல்வி கற்றுவந்தனர். இறுதிப்போரின் போது இந்தப் பாடசாலை காயமடைந்த மக்கள் தஞ்சமடைந்த ஒரு மருத்துவமனையாக இயங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது.

குறைந்த மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளை மூட நடவடிக்கை எடுக்கப்படும்நிலையில் இவ்வாறு இந்தப் பாடசாலையையும் மூடுவதற்கான நடவடிக்கையாகவே இதனைப் பார்க்கமுடிகின்றது - என்றனர். (ச-19)

# எமக்கே கச்சதீவு

கொழும்பு, ஜூலை 3

கச்சதீவென்பது இலங்கைக்குச் சொந்தமானது. அதனை மீளப் பெறுவதற்கு ஏதுவான சூழ்நிலை எதுவும் இல்லை என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கச்சதீவு விவகாரம் தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சரால் முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக் குறித்தும் கச்சதீவு மீளப்பெறக்கூடிய சூழ்நிலை உள்ளதா? எனவும் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"கச்சதீவென்பது தற்போது இலங்கைக்குச் சொந்தமான தீவாகும். தென்னிந்திய அரசியலிலேயே கச்சதீவு அரசியல் துரும்பு சீட்டாக பயன்படுத்தப்பட்டுவருகின்றது. கச்சதீவு இந்தியாவுக்கு வழங்கப்படமாட்டாது. அது எமது மண்ணுக்குச் சொந்தமாகும்" என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

## சாவகச்சேரி மருத்துவமனையின்

# நிரந்தர மருத்துவ அத்தியட்சகராக மீண்டும் காண்டீபன் கடமையேற்பு

யாழ்ப்பாணம், ஜூலை 3

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் நிரந்தர மருத்துவ அத்தியட்சகராக மருத்துவர் த.காண்டீபன் நேற்று மீண்டும் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் மருத்துவ அத்தியட்சகர் வெற்றிடத்துக்கு மருத்துவர் த,காண்டீபன் சுகாதார அமைச்சால் கடந்த வருடம் நியமிக்கப்பட்ட நிலையில் தனது உயர்கல்விக்காக பதவியேற்ற மறுநாளே விடுமுறையில் இங்கிலாந்து சென்றிருந்தார்.

அதனையடுத்து பதில் அத்தியட்சகராக மருத்துவர் இ.அர்ச்சுனா நியமிக்கப்பட்டார். அர்ச்சுனாவின் நிர்வாகத்தில் மருத்துவர்களுக்குள் ஏற்பட்ட குழப்பமான சூழ்நிலையைத் தொடர்ந்து அர்ச்சுனா பதவியிலிருந்து விலக்கப்பட்டார்.

பின்னர் வடமாகாண சுகாதாரத் திணைக்களத்தில் கடமையாற்றிய மருத்துவர் கோ.ரஜீவ் கடந்த வருடம் ஜூலை மாதம் 9 திகதி பதில் அத்தியட்சகராகப் பொறுப்பேற்றார். இந்த நிலையில் உயர் கல்வியை முடித்து அண்மையில் நாடு திரும்பிய மருத்துவர் த. காண்டீபன் நேற்று சாவகச்சேரி மருத்துவமனையின் மருத்துவ அத்தியட்சகராக தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இதுவரைகாலமும் பதில் கடமையாற்றிய மருத்துவர் கோ.ரஜீவ் மீண்டும் மாகாண சுகாதார அதிகாரி பணிமனைக்குத் திரும்பியுள்ளார். (ச-28)




# மாகாணமட்டப் பளுதூக்கல் போட்டி; 8 பதக்கங்களைக் குவித்த மகாஜன

யாழ்ப்பாணம், ஜூலை 3

மாகாணமட்டப் பளுதூக்கல் போட்டியில் மகாஜனக் கல்லூரி 5 தங்கம், ஒரு வெள்ளி, 2 வெண்கலம் உள்ளடங்கலாக 8 பதக்கங்களைப் பெற்று சாதனைபடைத்துள்ளது.

17 வயது ஆண்கள் பிரிவில் 55கிலோகிராம் எடைப் பிரிவில் வி.சாதூரியன் 135 கிலோகிராம் தூக்கி முதலாம் இடத்தையும் அதே எடைப்பிரிவில் கே.ஒஷான் 100 கிலோகிராம் தூக்கி 2ஆம் இடத்தையும் 17வயது வயதுப் பெண்கள் பிரிவில் 45கிலோகிராம் எடைப் பிரிவில் ரி.ஆரதி 62கிலோகிராம் தூக்கி 3ஆம் இடத்தையும் 81 கிலோகிராம் எடைப்பிரிவில் எஸ். சானுயா 74 கிலோகிராம் தூக்கி 1ஆம் இடத்தையும் 20வயது ஆண்கள் பிரிவில் 67 கிலோகிராம் எடைப் பிரிவில் ஜெ.கோமகன் 147 கிலோகிராம் தூக்கி முதலாம் இடத்தையும் 109கிலோகிராம் எடைப் பிரிவில் ஜெ.ஜெனுசின் 200கிலோகிராம் தூக்கி 1ஆம் இடத்தையும் 20வயதுப் பெண்கள் பிரிவில் 45கிலோகிராம் எடைப்பிரிவில் ஐ. மிஷாஜினி 48கிலோகிராம் தூக்கி 3ஆம் இடத்தையும் 71கிலோகிராம் எடைப்பிரிவில் ஆர்.ஸ்ரீவித்தகி 108 கிலோகிராம் தூக்கி முதலாம் இடத்தையும் பெற்றுள்ளனர். (ச-41)



# தாய்லாந்து கராத்தேப் போட்டி; 3 வெண்கலம் வென்ற வடக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 3

தாய்லாந்தில் கடந்த வாரம் நடைபெற்ற 14 நாடுகள் பங்குகொண்ட கராத்தேப் போட்டியில் இலங்கை கராத்தே சம்மேளன தேசிய அணி சார்பாகப் பங்குகொண்ட வடக்கு மாகாண வீரர்கள் மூவர் வெண்கலப் பதக்கங்களைத் தமதாக்கி சாதனைபடைத்துள்ளனர்.

இதில் யா/ சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவர்கள் விஜயராஜ், தமிழ்நிலவன், தமிழ்ச்செல்வன் மற்றும் யாழ்.சென்.பற்றிக் கல்லூரி மாணவர் ஜோண்றஜீவ் பியன் பெனோ ஆகியோரே பங்கேற்று வெற்றியீட்டியுள்ளனர். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணக வாழ்வில் இறைவனுடன்
12 வருட நினைவு அஞ்சலி

மண் மகிழ 28 . 06 . 1940



கண் நெகிழ 03 . 07 . 2013

அமரர் உயர்திரு
சின்னையா தவரெட்ணம் J.P
(முன்னாள் தலைவர் யாழ் மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் பணிப்பாளர் சபை உறுப்பினர் வடமாகான கடற்தொழில் அமைப்புத் தலைவர்)

உள்ளம் உருகுதப்பா எங்களை அள்ளி அணைத்ததையும், புன்சிரிப்பும் ஈர் ஆறு ஆண்டுகள் சென்றாலும் மாறாதப்பா எம்மை உயர்த்தி வைத்த உத்தமனே கருணை நிறைந்த உம்முகம் காணத் துடிக்கின்றோம். இன்றும் உங்கள் நினைவுகள் எங்கள் உள்ளத்தில் அழியாதவை என்றும் எம் நினைவில் மண்ணோடுஉங்கள் பூதவுடல் மறைந்தாலும் . உங்கள்நினைவுகள் எம்மை விட்டு மறையாது நிழல் தரும் மரமெனத் தங்களை நினைத்திருந்தோம் தாம் நிலையான நிழல் தேடி இறைவனடி சேர்ந்து விட்டீரே அப்பா நீங்கள் இல்லாமல் எம் வாழ்வில் நீரற்ற மரமாகியது தங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

83/11, பீச் றோட்,
குருநகர், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்


# ஷானிக்கு அஞ்சுவதேன்?

## அமைச்சர் நளிந்த கேள்வி

கொழும்பு, ஜுலை 3

குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகியுள்ள தரப்பினருக்கே குற்றப் புலனாய்வுத் திணைக்களப் பணிப்பாளராக ஷானி அபேசேகர நியமிக்கப்பட்டுள்ளமை நடுக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இன்று விமர்சனங்களை முன்வைக்கும் தரப்பினரே, ஷானி அபேசேகரவின் விசாரணை நடவடிக்கைகளை முடக்கி, அவரின் தொழில்சார் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தனர். ஷானி அபேசேகர திறமையான அதிகாரி. எனவே, ஷானி அபேசேகர யாரென்பது மக்களுக்குத் தெரியும். நாட்டுக்காக உயிரைக் கூட துச்சமெனக் கருதி செயற்படும் அதிகாரியை நாம் பாதுகாப்போம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)


காணி விற்பனைக்கு

கட்டுடை மானிப்பாய் கோவிற்பற்று எழுமுள்ளி ஒழுங்கையில் 6 பரப்பு வீடு கட்டுவதற்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு

தொடர்பு: 077 787 7843

(CR 4540001) E



பெயர் மாற்றம்

காசிகுடா பூநகரியில் வசிக்கும் நடராசா தெய்வானை ஆகிய நான் எனது பெயரை நடராசா தவமணி என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் நடராசா தவமணி என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

நடராசா தவமணி



தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்

ஆடிச் செவ்வாய் தற்காலிக கடை ஏலம் ஸ்ரீ துர்காதேவி தேவஸ்தானத்தின் ஆடிச்செவ்வாய் திருவிழாவிற்கான தற்காலிக கடை ஏலம் எதிர்வரும் 06.07.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 2.00 மணியளவில் சங்கப் பணிமனையில் நடைபெறும். கடையினை ஏலத்தில் எடுப்பவர்கள் முழுத் தொகையினையும் அன்றைய தினம் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

076 896 7664

இணைச் செயலாளர்கள்


# ஆசனத்தில் புறக்கணிப்பு

## தே.ம.சக்தி உறுப்பினர் குற்றச்சாட்டு

வவுனியா, ஜுலை 3

வவுனியா மாநகரசபையின் முதலாவது மாதாந்தக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றபோது ஆசன ஒதுக்கத்தில் பின்வரிசை ஆசனம் வழங்கப்பட்டுள் ளது என்று தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஒருவர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

இதற்குப் பதில் அளித்த ஆணையாளர் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரமும், ஏற்கனவே உள்ளூராட்சிமன்றங்களில் உறுப்பினர் களாக இருந்தவர்கள் என்ற அனுபவத்தின் அடிப்படையிலுமே ஆசன வரிசை ஒதுக்கப்படுகின்றது என்று அவர் தெரிவித்தார்.

பின்னுக்கு அமர்வதால் சில தெளிவுகள் விளக்கங்கள் குறைவாக உள்ளது என்று குறித்த உறுப்பினர் தெரிவித்தார். இது தொடர்பாக அடுத்த கூட்டத்தில் முழுமையான தெளிவை வழங்குவதாக முதல்வர் பதிலளித்தார். (ச-110)


தென்மராட்சி மேற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ/து) கைதடி

கட்டடங்கள், கட்டடத்தின் மேல் கூரைகள் வாடகைக்கு வழங்கல்

எமது சங்கத்திற்கு சொந்தமான தற்போது பாவனையில்லாத கட்டடங்கள் மற்றும் கட்டடத்தின் மேல் கூரைகள் (சூரிய மின்கலம் இணைப்பு செய்ய உகந்தது) வாடகைக்கு வழங்கப்பட உள்ளது. கட்டடத்தை வாடகைக்கு பெற விரும்புவோர் மானிப்பாய் வீதி கைதடியில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமை காரியாலத்திற்கு சமூகமளித்து கட்டடங்களை பார்வையிட்டு 16.07.2025 ம் திகதிக்கு முன்னர் மூடிய விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

1. களஞ்சியம் - மானிப்பாய் வீதி, கைதடி (களஞ்சியமாக பயன்படுத்த கூடியது)
2. கூட்ட மண்டபம் (1ம்மாடி ) - மானிப்பாய் வீதி, கைதடி (அலுவலக உபயோகத்திற்கு பயன்படுத்த கூடியது)
3. கடை கட்டடம் - மானிப்பாய் வீதி, கைதடி (வியாபார நோக்கத்திற்கு பயன்படுத்த கூடியது)
4. கடை கட்டடத் தொகுதி - மறவன்புலோ, தச்சன் தோப்பு, கைதடி மத்தி, கைதடிவடக்கு, கைதடி மேற்கு (வியாபார நோக்கத்திற்கு பயன்படுத்த கூடியது)
5. கடை கட்டடத் தொகுதி - கேரதீவு வீதி நாவற்குழி (மேல் மாடியுடன் உள்ளது)
6. அலுவலகம் மற்றும் களஞ்சிய கட்டடத்தின் மேல் கூரைகள் - மானிப்பாய் வீதி, கைதடி (சூரிய மின்கலம் இணைப்பு செய்ய உகந்தது)

தொடர்புகளுக்கு - 0212057004 / 0779525331

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி
பொதுமுகாமையாளர்
தென்மராட்சி மேற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ/து)
மானிப்பாய் வீதி,
கைதடி.

(CS 45810) E



ஓராண்டு நினைவு நாள்
03.07.2025

மலர்வு 16 . 03 . 1932



உதிர்வு 15 . 07 . 2024

அமரர் சொக்கலிங்கம் பராசக்தி (லண்டன்)

எங்கள் அன்பின் தாயே பராசக்தி!
பாசம் என்பதை உணர்த்தினாய் தாயே
பக்குவ நிலையினைப் புகட்டினாய் தாயே
பண்பின் பெருமையைக் காட்டினாய் தாயே
பாரினில் இனி நாம் காண்போமா தாயே!

நின்றும் இருந்தும் நடந்தும் கிடந்தும்
உடம்போடு கூடிய உயிர் உறவு
அற்று அறிவு மறக்கும் பொழுது
சிவநெறி வேண்டி இனிப்பிறவாத வரம்
தந்து ஆண்டுகொள் என இறைவனை
இறைஞ்சி ஆனந்தமாய் முத்தி பெற்றாய் தாயே

அன்னை ஊட்டிய பிடிசோற்றில்
ஆயுள் முழுவதும் பசிமறந்தோம்.
உங்கள் ஆன்மா சாந்தியடைய வேண்டுகிறோம்.

82/22 செட்டித்தெரு
நல்லூர், யாழ்ப்பாணம்

தகவல்
குடும்பத்தினர்.

(CS 58753) E


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
## பெறுகை அறிவித்தல்
## 2025ம் ஆண்டுக்கான சுத்திகரிப்பு, பாதுகாப்பு, சாரதி, வேலை/ வெளிக்கள சேவைகளுக்கான விலை மனுக் கோரல்

தலைவர், பெறுகைக்குழு அவர்களினால் வலிகாமம் தெற்கு பிரதேசசபையில் 2025 ஆம் ஆண்டிற்கான சுத்திகரிப்பு சேவை, பாதுகாப்பு சேவை, சாரதி சேவை, வேலை / வெளிக்கள சேவையை வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.


| பெறுகை இலக்கம் | சேவையும் நாளாந்த பணிக்காலமும் | தேவையான ஆளணி எண்ணிக்கை | ஒப்பந்த காலம் | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|
| NP/14/41(15)/02/PC/01 | சாரதி சேவை (09 மணி.) | 04 | 365 நாட்கள் | ரூ. 41000.00 | 03.09.2025 |
| NP/14/41(15)/02/PC/02 | சுத்திகரிப்பு சேவை (08 மணி.) | 20 | 365 நாட்கள் | ரூ. 183000.00 | 03.09.2025 |
| NP/14/41(15)/02/PC/03 | பாதுகாப்பு சேவை (12 மணி.) | 04 | 365 நாட்கள் | ரூ. 37000.00 | 03.09.2025 |
| NP/14/41(15)/02/PC/04 | வேலை/ வெளிக்கள சேவை (08 மணி.) | 05 | 365 நாட்கள் | ரூ. 46000.00 | 03.09.2025 |

1. சேவை வழங்குநர்கள் சுத்திகரிப்பு, பாதுகாப்பு, சாரதி, வேலை/ வெளிக்கள சேவையை வழங்கலுக்கான வியாபாரப்பதிவுடைய ஒரு நிறுவனமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 3 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.
2. சேவை வழங்குநர்களின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் யாழ் மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
3. சேவை வழங்குநர்கள் ஒவ்வொரு பெறுகைக்குமான ஆங்கிலத்தில் மட்டும் உள்ள தனித்தனி பெறுகை ஆவணங்களை வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகத்தில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் 03.07.2025 தொடக்கம் 16.07.2025 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 3.00 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூ.3,500.00 ஐ செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
4. பெறுகை ஆவணங்கள் 17.07.2025 ம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியவாறு "தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் / கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பெறுகைப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.
5. வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் இயங்கும் சமூக மட்ட பொது அமைப்புகள் மற்றும் சங்கங்களை வலுவூட்டும் வகையில் பெறுகை கோரலில் மேற்குறித்த நிபந்தனைகளில் விலக்களிப்பு வழங்கப்படும்.
6. கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

**தி. பிரகாஷ்,**
**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை,**
**சுன்னாகம்.**

## மரண அறிவித்தல்

தோற்றம்
18 . 11 . 1936



மறைவு
29 . 06 . 2025

### வீரகத்திப்பிள்ளை முத்துலிங்கம்

**(ஓய்வு பெற்ற உதவி முகாமையாளர் இ.போ.சபை- கோண்டாவில்,காரைநகர்)**

கலாசாலை வீதி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்திப்பிள்ளை முத்துலிங்கம் அவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை (29.06.2025) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்திப்பிள்ளை - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவகுரு (மலாயன் பென்சனியர்) - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சற்குணதேவி (ஓய்வுநிலை ஆசிரியர்-யா/வயாவிளான் மத்திய கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம் (ஓய்வுநிலை ஆசிரியர்-யா/கோண்டாவில் இராமகிருஷ்ணா மகா வித்தியாலயம்), தவமலர் மற்றும் பரமயோகன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், நவகாந்த் (ஆசிரியர்-யா/கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம்), ஷாமிலா (ஆசிரியர்-யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம்), மைதிலி (லண்டன்), ஆகியோரின் பாசமிகு தந்தையும், முருகதர்ஷினி (ஆசிரியர்-யா/ஆனைப்பந்தி மெதடிஸ் மிசன் வித்தியாலயம்), குகநாதன் (ஆசிரியர்-யா/கொக்குவில் இந்துக்கல்லூரி), சிவமயூரன் -(லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கோமுகி, பிரவீனா, டிரோசன், சதுர்சன், ஹவிசன், யஸ்விகா, யுதாஷினி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, கமலாம்பிகை, சிவபாதசுந்தரம் மற்றும் சிவலோகநாதன், சிவானந்தன், சாந்தி, காலம் சென்ற பத்மநாதன் மற்றும் பாலராணி ஆகியோரின் மைத்துனரும், பஞ்சலிங்கம்(ஓய்வுநிலை அதிபர்-யா/கொக்குவில் இந்துக் கல்லூரி மற்றும் யா/இந்துக்கல்லூரி), காலம் சென்ற இராஜேந்திரம் மற்றும் ஜெயதேவி, சதாயினி,சற்குணதேவி ஆகியோரின் சகலனும், நிரஞ்சன், நிருபா, நிலந்தி , முகுந்தினி ஆகியோரின் சித்தப்பாவும், உருத்திரா, சிவப்பிரியை, கிரிதரன், நயங்கனா, லோஜிகா, சஞ்சுதா, நிஷாந்த் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வெள்ளிக்கிழமை (04.07.2025) முற்பகல் 08.00 .மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்**
**077 596 3550**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



மலர்வு
19.12.1945

உதிர்வு
02.07.2025

### பரஞ்சோதி தர்மலிங்கம்

உரும்பிராயை பிறப்பிடமாகவும் சுழிபுரம், தற்போது யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பரஞ்சோதி தர்மலிங்கம் அவர்கள் நேற்று (02.07.2025) புதன்கிழமை சிவபதடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான வைரவப்பிள்ளை - சின்னதங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, நடராசா, செல்லதுரை, இராசதுரை, தம்பிதுரை, அருளம்மா, ரோசம்மா, இராசக்கோன் ஆகியோரின் சகோதரியும், தர்மலிங்கம் (அப்பு) அவர்களின் வாழ்க்கைத் துணைவியாரும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அம்பலவாணர், இராமநாதன், குணரத்தினம், பரமேஸ்வரி மற்றும் கெங்காதேவி, காலஞ்சென்ற பாலநாதன் மற்றும் ஜெயராசசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்தினியும், வான்மதி (MLT - யாழ் போதனா வைத்தியசாலை), ஆதவன் (France), ஆகியோரின் அருமைத் தாயாரும், பரணிதரன், ஜெயந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆரணி, பைரவி, மோனாலி, வருணன், ஆராதனா ஆகியோரின் பாசம்மிக்க பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2025) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இல 17/5, 1ம் ஒழுங்கை**
**(கிடாய் விழுந்தான்)**
**பருத்தித்துறை வீதி**
**யாழ்ப்பாணம்**

**வான்மதி (மகள்) :**
**077 982 8104**
**பரணிதரன் (மருமகன்) :**
**077 982 8163**

(CS 58758) E

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# உயர்குருதியழுக்கம் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 3

சுகாதார மேம்பாட்டை நோக்கிய பயணத்தில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் பொது மருத்துவ நிபுணர் செல்லதுரை பிரசாத் எழுதிய 'உயர் குருதி அமுக்கம்' எனும் பொதுமக்களுக்கான வழிகாட்டி நூல் வெளியிட்டுவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு பருத்தித்துறை சூரிய மஹால் மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் மருத்துவர் கீர்த்தனன், மருத்துவபீட உயிர் இரசாயனவியல் துறைத் தலைவர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், இலங்கை உயர் குருதி அமுக்க சங்கத் தலைவர் பேராசிரியர் தி. குமணன், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் ஆ. அஜந்தகுமார், முன்னாள் பேராசிரியர் நடராஜசுந்தரம், யாழ். பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், மருத்துவர்கள், தாதியர்கள், பருத்தித்துறை நகரபிதா டக்ளஸ் போல், உள்ளூராட்சிசபைகளின் உறுப்பினர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-100)

# மக்களைத் திரளாக்கும் ஆற்றலை தமிழ்க்கட்சிகள் இழந்துவிட்டன!

## அரசியல் ஆய்வாளர் யோதிலிங்கம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 3

**தமிழ் அரசியல் கட்சிகள் மக்களைத் திரளாக்கும் ஆற்றலை இழந்துவிட்டன. கட்சிகள்மீதான மக்களின் அதிருப்தி இன்று கற்பனை செய்யமுடியாத அளவிற்கு உயர்ந்திருக்கின்றது. சிவில் அமைப்புகள் இவற்றை முன்னெடுக்க முயல்வது எதிர்காலத்தில் ஒரு வலுவான அரசியல் இயக்கத்தைக் கட்டியெழுப்ப வழிசமைக்கும் என்று அரசியல் ஆய்வாளர் சட்டத்தரணி சி.அ. யோதிலிங்கம் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் வோல்கர் ட்ரக்கின் இலங்கைப் பயணம் பலத்த அதிர்வலைகளை உருவாக்கியுள்ளது. ஆணையாளரின் ஆரம்ப நிகழ்ச்சிநிரலில் தாயகப் பயணம் இருக்கவில்லை. பின்னரே நிகழ்ச்சிநிரல் மாற்றப்பட்டு தாயகப் பயணமும் நிகழ்ச்சிநிரலில் சேர்க்கப்பட்டது.

இந்த விவகாரத்தில் "மக்கள் செயல்" அமைப்பினரால் முன்னெடுக்கப்பட்ட அணையா விளக்குப் போராட்டம் பல அடைவுகளைப் பெற்றிருக்கின்றது. அதில் முதலாவது மக்களைத் திரளாக்கியமையாகும். "பொத்துவில் முதல் பொலிகண்டி வரை" போராட்டத்திற்குப் பின்னர் மக்கள் தாமாகவே திரளாகக் கலந்துகொண்டமை இப்போராட்டத்தில்தான். புதிய தலைமுறைக்கு வரலாற்றைக் கடத்தியமை தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டிய செயற்பாடாகும். அரசியல் தலைமையும் பலவீனமாகியிருக்கின்ற சூழலில் வரலாற்றைக் கடத்துவதில் அடையாளப் போராட்டங்கள் பெரிய பங்கினை வகிக்காது. பேரெழுச்சிகளே வலிமையான பங்கினையாற்றும்.

யுத்தம் நடந்துகொண்டிருந்தபோது ஐ.நா. வடக்கில் இருந்து முன்னறிவித்தல் இல்லாமல் வெளியேறி சாட்சியம் இல்லா யுத்தம் நடக்கக் காரணமாக அமைந்துவிட்டது. - என்றார். (ச)



புலோலி பர்வதவர்த்தனி சமேத பசுபதீஸ்வரர் (பருத்தித்துறை சிவன் கோவில்) வருடாந்த திருவிழாவின் தேர் உற்சவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பெருந்திரளான பக்தர்கள் பங்கேற்புடன் சிறப்புற இடம்பெற்றது. (ச-100)

# குடும்பஸ்தர் உயிர்மாய்ப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 3

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புலோலி தெற்கு கூவில் பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் கடலில் வீழ்ந்து உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை நடந்துள்ளது. சடலம் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்ட நிலையில் மரணம் தொடர்பில் கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் விசாரணை மேற்கொண்டார். (ச-100)



# இலத்திரனியல் கழிவுகளை தரம்பிரிக்கும் செயற்றிட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 3

இலத்திரனியல் கழிவுகளை முகாமைத்துவம் செய்யும் செயற்றிட்டம் யாழ்ப்பாணம் மாநகரசபையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வர் மதிவதனி கடந்த புதன்கிழமை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்தார்.

இந்தத் திட்டத்தின்கீழ் அலுவலகங்களின் இலத்திரனியல் கழிவுகள் தரம்பிரிக்கப்பட்டு இலத்திரனியல் கழிவுகளைச் சேகரிப்புச் செய்யும் நிலையத்துக்குக் கையளிக்கப்படவுள்ளன. ஆரம்பநிகழ்வில் மாநகர ஆணையாளர், பிரதம பொறியியலாளர், மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி, மாநகரத் திணைக்களத் தலைவர்கள், சுற்றுச்சூழல் அதிகாரசபையின் பிரதிநிதிகள், மாநகர உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (எ-20)



# வினைத்திறன்மிக்க சபையாக வேலணையை மாற்றவேண்டும்

## *கன்னி அமர்வில் தவிசாளர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜூலை 3

வினைத்திறனான சபையாக வேலணைப் பிரதேசசபையை மாற்றியமைக்க அனைத்து உறுப்பினர்களும் கட்சி பேதங்கள் பிரிவினைகள் இன்றி உழைக்க வேண்டும் என்று வேலணைப் பிரதேசசபையின் தவிசாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வேலணைப் பிரதேசசபையின் கன்னி அமர்வு கடந்த திங்கட்கிழமை காலை நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

வேலணைப் பிரதேசசபை பின்தங்கிய பிரதேசசபையாக உள்ளது. அந்த நிலைமை இனியும் தொடரக்கூடாது. எமது சபையை வருமானம் கூடிய சபையாக, வினைத்திறனான சபையாக மாற்றுவது அவசியம்.

சபையின் கடந்த ஆட்சிக்காலத்தில் நாட்டின் நிலைமை, பொருளாதார நெருக்கடி போன்றவற்றால் பல திட்டங்கள் தடைப்பட்டுள்ளன. அவற்றை நாம் கட்சி பேதங்கள் இன்றி முன்னெடுக்கவேண்டும். ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவும் வேண்டும்.

வங்களாவடி கடைத்தொகுதியின் மேல் தளத்தை அமைத்தல், பொது விளையாட்டு மைதானம் அமைத்தல், சோலை வருவாய் திட்டத்தை வேலணையின் அனைத்துக் கிராமங்களிலும் முன்னெடுத்தல், சுற்றுலா, விவசாய நடவடிக்கைகளை விரிவாக்கல், வீதிச் சுற்றுவட்டம் அமைத்தல், முக்கியஸ்தர்களின் நினைவு சிலைகள் அமைத்தல், வேலணை நுழைவாயில் வளைவு அமைத்தல் போன்ற திட்டங்களை இந்த ஆட்சிக்காலத்தில் முன்னெடுக்க நம்பிக்கையுடன் முயற்சிக்கின்றேன் -என்றார். அமர்வில் நியதிக் குழுக்களுக்கான உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். குடிதண்ணீர் பிரச்சினை, கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்தல், திண்மக்கழிவகற்றல், சுகாதார மேம்பாடு, குறிகாட்டுவான் பயணிகள் போக்குவரத்து சீரமைப்பு, விவசாயம், வருவாயை அதிகரிக்க சந்தைகள் உள்ளிட்ட வருமான மீட்டும் வழிமுறைகளைப் பயன்படுத்தல், உள்ளக வீதிச் சீரமைப்பு போன்ற விடயங்கள் உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட[illegible] (எ-20.125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சேமித்த பெற்றோலால் தீப்பற்றி எரிந்த வீடு!

வவுனியா, ஜூலை 3

வவுனியா, பண்டாரிக்குளத்தில் அண்மையில் வீடொன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. விளக்கு ஏற்றுவதற்காக தேங்காய் எண்ணெய்க்குப் பதிலாக "கான்" ஒன்றில் சேமித்துவைத்திருந்த பெற்றோலை ஊற்றியதாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. அறையொன்றில் ஏற்பட்ட தீ வீடு முழுவதும் பரவியுள்ளது. தீ விபத்துத் தொடர்பில் வவுனியா மாநகரசபையின் தீயணைப்புப் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்று அவர்கள் தீயைக் கட்டுப்படுத்தினர். ஆயினும் வீடு தீ விபத்தால் பகுதியளவில் சேதமடைந்துள்ளது. (எ-110)

**The Royal College of Jaffna**
தனியார் கல்வி நிறுவனம் - சங்கானை
3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப்பயில.
By ந.விக்னேஸ்வரன் ஆசிரியர் (27 வருட அனுபவம்)
பிரான்பற்று வீதி, சங்கானை
தொடர்பு: 077 675 1649

**The Royal College of Jaffna**
தனியார் கல்வி நிறுவனம் - சங்கானை
A/L மாணவர்களுக்கு சிறுகுழுக்களாக இந்து நாகரிக பாடம் கற்பிப்பதற்கு ஆசிரியர் தேவை. சங்கானை அல்லது அண்டிய பகுதியில் வசிப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்.
பிரான்பற்று வீதி, சங்கானை
தொடர்பு: 077 675 1649

## பெயர் மாற்றம்

சங்கரப்பிள்ளை வீதி ஆனைக் கோட்டையை வதிவிடமாக கொண்ட மரியநாயகம் மனோரஞ்சி ஆகிய நான் எனது பெயரை இன்று தொடக்கம் மனோரஞ்சிதம் என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் மனோரஞ்சிதம் என கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

மனோரஞ்சிதம்



பனை வெல்லம் தயாரித்தல் தொடர்பான பயிற்சி வழங்கும் நிகழ்வு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் முல்லையடியில் அமைந்துள்ள பனை வெல்லம் உற்பத்தி நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகத்தின் விதாதா அலகின் ஏற்பாட்டில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் அனுசரணையுடன் இந்த நிகழ்வு நடைபெற்றது. பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வளவாளராக பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் வளவாளர் தி. குணபாலசிங்கம் கலந்துகொண்டார். (எ-41-9)

# குடும்பத்தலைவர் ஒருவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

## வவுனியாவில் சம்பவம்

மன்னார், ஜூலை 3

வவுனியா சமயபுரம் பகுதியில் குடும்பத்தலைவர் ஒருவர் கிணற்றுக்குள் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பெண்ணொருவரையும் மற்றும் அவருடைய தாயாரையும் கத்தியால் குத்திவிட்டு கிணற்றுக்குள் குதித்த நிலையிலேயே அந்நபர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. காயமடைந்த பெண்கள் இருவரும் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தாக்குதலுக்கு இலக்கான பெண், அந்தக் குடும்பத்தலைவருடன் கடந்த சில காலமாக ஒன்றாக வாழ்ந்து வந்தவர் என்று அந்தப் பகுதி மக்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

அவர்கள் இருவரும் இதற்கு முன்னர் வெவ்வேறு திருமணங்களை முடித்திருந்தனர் என்றும் பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இந்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-110,18)

# மெதடிஸ்த பெண்கள் பாடசாலைக்கு புதிய அதிபர் நியமனம்



யாழ்ப்பாணம், ஜூலை 3

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கு திருமதி ஐ.எம். முரளிதரன் புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அண்மையில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். (ச)

## கண்ணீர் அஞ்சலி



**கலாநிதி அருளையா ஆனந்தகுமாரசாமி**
(ஓய்வு பெற்ற தேயிலை ஆராய்ச்சி உத்தியோகத்தர்-தலவாக்கலை)

காரைநகர் நடுத்தெருவை பிறப்பிடமாகவும், மருதடியை வசிப்பிடமாகவும் கொண்ட அருளையா ஆனந்தகுமாரசாமி அவர்கள் நேற்று (02.07.2025) புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அருளையா-நாகரத்தினம் தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்ற ஜயாத்துரை-பார்வதிதேவி (நயினாதீவு) தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சரோஜாவதியின் அன்புக் கணவரும், சிவபாதசுந்தரம் (சிங்கப்பூர்), நமசிவாயம்பிள்ளை (ஓய்வு பெற்ற ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோகேஸ்வரி (சிங்கப்பூர்), செல்வராணி ஆகியோரின் மைத்துனரும், ஜெயகணேசன், பாலகுமார், புருஷோத், மோகன்ராஜ் (ஆசிரியர் கண்டி) ஆகியோரின் பெரிய தந்தையாரும், சைத்தகியின் மாமனாரும், தன்வியின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் மருதடியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 11 . 1946



மறைவு 02 . 07 . 2025

**வேலுப்பிள்ளை தேவதாசன்**
(முன்னாள் இ.போ.ச. அலுவலகர்)

காங்கேசன் துறை வீதி, மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தேவதாசன் (முன்னாள் இ.போ.ச. அலுவலகர்) அவர்கள் நேற்று (02.07.2025) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான உமாமகேஸ்வரன் - கௌரிப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும், கோமளவல்லியின் (ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர்) அன்புக் கணவரும், கௌரிசங்கர் (பேராதனைப் பல்கலைக்கழகம்) அவர்களின் பாசமிகு தந்தையும், சௌந்தரவல்லி (ஓய்வு பெற்ற ஆசிரியர்), நிர்மலானந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், திருமதி. மாதங்கி சிவசங்கர் (அவுஸ்திரேலியா) அவர்களின் அன்புச் சித்தப்பாவும், கங்காசுதனின் (சிங்கப்பூர்) அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள், இன்று (03.07. 2025) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாவிட்டபுரம் தச்சன்காடு இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

விமன் காமம்,
தெல்லிப்பளை

தகவல் -
மனைவி, மகன்
077 934 6555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்கு...

யுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் நான்காவது மதிப்பாய்வுக்கு பணியாளர்கள் மற்றும் அதிகாரிகள் மட்ட இணக்கப்பாடுகள் அண்மையில் ஏற்பட்டிருந்தன. இதைத் தொடர்ந்தே, சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை நேற்றுமுன்தினம் இதற்காக ஒப்புதலை வழங்கியுள்ளது. இதற்கமைய, சுமார் 350 மில்லியன் அமெரிக்க டொலர் இலங்கைக்கு வழங்கப்படவுள்ளது. (அ-ம-இ)

## உள்ளகப்...

அவதானித்தார் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார். இது தொடர்பில் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் வருகை நாட்டுக்கு மிக முக்கியத்துவம் மிக்கதாக அமைந்தது. ஏனெனில் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கிலேயே ஐ.நா. மனித உரிமைகள் பேரவை இயங்குகின்றது. எனினும், வடக்கு, கிழக்கு போர் விவகாரம் தொடர்பிலேயே மனித உரிமைகள் பேரவை செயற்படுகின்றது என்ற பிம்பம் இங்கு உருவாக்கப்பட்டுள்ளது.

கல்வி உரிமை, வாழும் உரிமை, குடிநீர் உரிமை, மாற்றுதிறனாளிகளுக்கான உரிமை, சமூக நீதி உட்பட மனித உரிமைகள் தொடர்பில் மீளாய்வு செய்வதே மனித உரிமைகள் ஆணையாளரின் பொறுப்பாகும்.

2022ஆம் ஆண்டில் இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் முன்வைக்கப்பட்டது. இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறல் பொறிமுறையை உருவாக்க வேண்டும் என்று அதில் வலியுறுத்தப்பட்டது. சர்வதேச தலையீடும் கோரப்பட்டது.

நாம் ஆட்சிக்கு வந்த பின்னர், காலஅவகாசம் கோரினோம். தேசியப் பொறிமுறை ஊடாக பொறுப்புக்கூறல் நடவடிக்கை வலுப்படுத்தப்படும் என உறுதியளித்திருந்தோம். அந்த கோரிக்கைக்கு ஐ.நா. மனித உரிமைகள் பேரவை செவிமடுத்தது. அதேபோல் எம்மால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கையை கண்காணிப்பதற்கு இலங்கைக்கு வருமாறும் அழைப்பு விடுத்தோம். அதற்கமையவே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை வந்தார்.

தேசியப் பொறிமுறை ஊடாக முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கையை அவரால் நேரில் அவதானிக்கமுடிந்தது. ஜனாதிபதித் தேர்தலுக்கு பிறகு எந்தவொரு தேர்தல் வன்முறைச் சம்பவமும் இடம்பெறவில்லை. நாம் வெற்றிக் கொண்டாட்டங்களிலும் ஈடுபடவில்லை. பொதுத்தேர்தல் அமைதியாக நடந்தது. ஐரோப்பிய ஒன்றியக் கண்காணிப்புக் குழுவினர் நாட்டுக்கு வந்து சிறப்பான அறிக்கையை வெளியிட்டனர். இதுதான் இலங்கை அரசியலில் ஏற்பட்டுள்ள மாற்றம். யாழ்ப்பாணத்தில் 37 வருடங்களாக மூடப்பட்டிருந்த வீதியை நாம் திறந்தோம். இப்படி பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கும் நிலைப்பாட்டிலேயே உள்ளோம். அதற்காகக்குழுவொன்றுநியமிக்கப்பட்டுள்ளது. அந்தச் சட்டம் நிச்சயம் நீக்கப்படும். காணாமற்போனோர் விவகாரத்தில் தலையிட்டுள்ளோம். அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு நீதி வழங்கப்படும். இறந்தவர்களை நினைவுகூருவதற்குரிய உரிமை பாதுகாக்கப்பட்டுள்ளது. நிகழ்நிலைக் காப்புச் சட்டம் மீளாய்வுக்கு உட்படுத்தப்படும். நாம் அதிகாரத்துக்கு வந்த பிறகு இனவாதம் மற்றும் மதவாதம் தலைதூக்க இடமளிக்கவில்லை. புதிய பயணம் தொடர்பில் நம்பிக்கை வழங்கியுள்ளோம் - என்றார். (அ-எ-44)

## கிருமித்...

நாதன் (வயது-75) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

ஜேர்மனியைச் சேர்ந்த அவருக்கு அண்மையில் இருதய அறுவைச் சிகிச்சை இடம்பெற்றுள்ளது. ஓய்வு காலத்துக்காக யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த நிலையிலேயே திடீர் சுகவீனமுற்று உயிரிழந்துள்ளார்.

உடற்கூற்றுப் பரிசோதனையின்போது, அடையாளம் காணப்படாத கிருமித் தொற்று ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி வின்ஸ்ரன் தயான் அன்ரலா மேற்கொண்டார். (அ-ம-26)

## விசாரணைகளுக்கு...

சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது, 'செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்ன?' என்று ஊடகவியலாளர்கள் வினவியபோது, அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

செம்மணிப் புதைகுழி விவகாரம் தொடர்பில்ஜுன்29ஆம்திகதிவழக்குவிசாரணை இடம்பெற்றது. அரச தரப்பிலிருந்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தாலும் நீதியமைச்சாலும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. செம்மணிப் புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும். வழக்கு விசாரணை இடம்பெறுவதால் மேலதிக தகவல்களை வெளியிட முடியாது' - என்றார். (அ-ம-44)

## அர்ச்சுனாவின்...

துள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன், தனது மருத்துவ அதிகாரிப் பதவியில் இருந்து விலகாமல், பொதுத் தேர்தலில் போட்டியிட்டதால், அவர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தொடர்ந்து பதவி வகிப்பதற்கான தகுதியை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் கடந்த மாதம் 26ஆம் திகதி விசாரணைக்காக எடுக்கப்பட்டிருந்தது. இதன்போது, நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, அரச மருத்துவ அதிகாரியாகப் பணியாற்றிக்கொண்டே பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுவை தாக்கச் செய்தார் என்ற விடயம் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது.

இந்த வழக்கு அர்ச்சுனா எம்.பி.யின் தரப்புச் சமர்ப்பணங்களுக்காக நேற்று அழைக்கப்பட்டபோது, அர்ச்சுனாவின் தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி சேனானி தயாரத்ன, 'எனது கட்சிக்காரர் நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது சம்பளமின்றி சேவையிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டிருந்தார். ஆதலால், அவரை ஒரு அரசாங்க ஊழியராகக் கருத முடியாது' என்று தனது வாதத்தை முன்வைத்திருந்தார்.

இதையடுத்து, வழக்கு அடுத்தகட்ட நடவடிக்கைக்காக ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதிக்குத் தவணையிடப்பட்டுள்ளது. அத்துடன், வழக்கு முடியும் வரை நாடாளுமன்ற அமர்வுகளிலும், வாக்கெடுப்புகளிலும் பங்கெடுப்பதற்குத் தடை விதிக்குமாறு மனுதாரர் கோரியிருந்த நிலையில் அந்த உத்தரவுகளைப் பிறப்பிப்பதற்கு நீதிமன்றம் மறுப்புத் தெரிவித்துள்ளது. (அ-ம-26)

## கொடிகாமத்தில்...

இருந்து விடுமுறைக்காக யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த ராஜரட்ணம் சுமதி (வயது-58) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் கொடிகாமம் பகுதியில் சைக்கிளும் பட்டா ரக வாகனமும் மோதி விபத்துக்குள்ளானதிலேயே, சைக்கிளில் பயணித்த மேற்படி பெண் படுகாயமடைந்துள்ளார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி வின்ஸ்ரன் தயான் அன்ரலா மேற்கொண்டார். (அ-ம-26)

## சுன்னாகத்தில்...

இடத்தில் உயிரிழந்துள்ளனர். நேற்று மாலை 6.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

து.திசாளன் (வயது-19), க.பிரவீன் (வயது-18) என்ற இளைஞர்களே இவ்வாறு உயிரிழந்தவர்களாவர். விபத்துத் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அதிவேக மோட்டார்சைக்கிளொன்றை நேற்றுமுன்தினம் கொள்வனவு செய்து விட்டு, அதில் நேற்றுப் பயணித்த நிலையிலேயே இந்தக் கோரவிபத்து சம்பவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-66)

## ரயிலுடன்...

இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. மோட்டார்சைக்கிளில் பயணித்த தாயும், மகளும் படுகாயமடைந்த நிலையில் அவர்கள் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (அ-ம-110)

## ஒக்ரோபர்...

வதற்கும், டிசெம்பரில் இறுதிவாக்கெடுப்பை நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

2026ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும்போது தேசிய கொள்கைச் சட்டத்தில் உட்சேர்க்கப்பட்டுள்ள முன்னுரிமைகள் மற்றும் கிராமிய அபிவிருத்தித் தொடக்க முயற்சிகளுக்கு முன்னுரிமையளிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

2026ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை 2025 ஒக்ரோபர் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து, அதன் இரண்டாம் வாசிப்பை (வரவு-செலவுத் திட்ட உரையை) 2025 நவம்பர் மாதத்தில் நடத்துவதற்கும், மூன்றாம் வாசிப்புத் தொடர்பான வரவு-செலவுத்திட்ட விவாதத்தை 2025 நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களில் நடத்தக்கூடிய வகையிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-44)

## மருதமடு...

ஓய்வுநிலை ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, குருநாகல் மறைமாவட்ட ஆயர் அந்தோனி பெரேரா ஆண்டகை, மடு பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார், மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நேசன் அடிகளார் ஆகியோர் இணைந்து திருவிழாத் திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர்.

திருவிழா திருப்பலியை தொடர்ந்து மடு அன்னையின் திருச்சொரூபப் பவனி இடம்பெற்றது. அதைத் தொடர்ந்து மடு அன்னையின் ஆசீர்வாதமும் வழங்கப்பட்டது.

கடந்த ஜுன் மாதம் 23ஆம் திகதி கொடியேற்றத்தைத் தொடர்ந்து நவநாள் ஆராதனைத் திருப்பலிகள் இடம்பெற்று நேற்று திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் மாலை நற்கருணைப் பெருவிழா இடம்பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-56)

## செம்மணிப்...

காணப்பட்டுள்ளன. செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான இரண்டாம்கட்ட அகழ்வுப் பணிகளின், ஏழாம் நாள் நடவடிக்கைகள் நேற்றையதினம் இடம்பெற்றன. நேற்றையதினம் புதிதாக 4 சிதிலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன்படி, இதுவரை 38 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், 30 என்புத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜாவின் கண்காணிப்பில், துறைசார் நிபுணரும் பேராசிரியருமான சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணிகளான ஞா.ரணித்தா மற்றும் வி.கே.நிரஞ்சன், சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினரும் அகழ்வுப் பணிகளின் போது முன்னிலையாகி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## நீள்கிறது...

இதற்கு முன்னர் அகழ்வுப் பணிகள் இடம்பெற்ற பகுதிக்கு மேலதிகமாக, பிறிதொரு இடமும் மனிதப் புதைகுழியாக இருக்கலாம் என்று துறைசார் பேராசிரியர் ராஜ்சோமதேவ நீதிமன்றத்தின் கவனத்துக்கு ஏற்கனவே கொண்டு சென்றிருந்தார். அவரால் அடையாளப்படுத்தப்பட்ட இடத்தில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்கு நீதிமன்றமும் அனுமதி வழங்கியிருந்தது. இவ்வாறான நிலையிலேயே, நேற்றறைதினம் புதிய இடத்தில் அகழ்வுப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த விடயம் மிகவும் எதிர்பார்ப்புக்கு உரியதாக மாறியுள்ளது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavahanam.org

## நட்டாங்கண்டல் மருத்துவமனையில்

# அம்புலன்ஸ் இன்றி மக்கள் அந்தரிப்பு!

முல்லைத்தீவு, ஜூலை 3

முல்லைத்தீவு நட்டாங்கண்டல் மருத்துவமனையில் கடந்த 15 நாள்களாக அம்புலன்ஸ் சேவையிலிருந்து விலக்கப்பட்டுள்ளதால் பெரும் துயரங்களைச் சந்தித்துவருகின்றோம் என்று பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

நட்டாங்கண்டல் பிரதேசத்தை அண்டிய பாண்டியன்குளம், மூன்று முறிப்பு, பனங்காமம், கரும்புள்ளியான் குளம், செல்வபுரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலுள்ள மக்கள் குறித்த மருத்துவமனையின் சேவையை நம்பியே இருக்கின்றனர். கடந்த 15 நாள்களாக அம்புலன்ஸ் இல்லாத காரணத்தினால் முச்சக்கரவண்டிகளுக்கு 3 ஆயிரம் ரூபா தொடக்கம் 4 ஆயிரம் ரூபா வரை கொடுத்தே மல்லாவி ஆதார மருத்துவமனைக்குச் செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் உரிய நேரத்துக்குள் சிகிச்சையைப் பெற வேண்டிய நோயாளர்கள் உயிரிழக்கும் அபாய நிலையும் ஏற்படலாம்.

இதேவேளை மருத்துவமனை அம்புலன்ஸ் சாரதியும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளநிலையில் துணுக்காய் கல்வி வலயத்தில் கடமையாற்றிய சாரதி ஒருவர் மாற்றம் பெற்றபோதும் அவர் இதுவரை குறித்த பகுதியில் கடமைகளைப் பொறுப்பேற்கவில்லை - என்றனர்.

இதுதொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் உமாசங்கரிடம் தொடர்புகொண்டு கேட்டபோது,

குறித்த மருத்துவமனையில் பணியில் இருந்த சாரதி இடமாற்றம் பெற்றுள்ளார். அதனால் மருத்துவமனை அம்புலன்ஸ் வண்டியை மல்லாவி ஆதார மருத்துவமனையின் பணிக்காக இணைப்புச் செய்யப்பட்டுள்ளது. அவசர நேரத்தில் அம்புலன்ஸ் நட்டாங்கண்டல் மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்படும். வெற்றிடமாகவுள்ள சாரதி சேவைக்கு ஓரிரு தினங்களுக்குள் ஒருவர் முழுமையாக நியமிக்கப்படுவார் - என்றார். (ச)



# ஸ்ரீமோகனனுக்கு சேவைநலன் பாராட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ். மாவட்ட மேலதிக செயலாளராக (காணி) பதவிவகித்து வலுசக்தி அமைச்சின் மேலதிக செயலாளராகப் பதவியுயர்வு பெற்றுச்செல்லும் க.ஸ்ரீமோகனனுக்கான சேவைநலன் பாராட்டு விழாவும் பிரியாவிடை நிகழ்வும் கடந்த திங்கட்கிழமை யாழ்.மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் மாவட்டச் செயலாளர் ம. பிரதீபன் தலைமையில் நடைபெற்றன.


யாழ்.மாவட்டத்தில் இரண்டு வருடங்களாக மேலதிக மாவட்டச் செயலாளர் (காணி) கடமையாற்றி இலங்கை நிர்வாக சேவைகள் விசேட தரத்துக்குப் பதவியுயர்வு பெற்றுச்செல்லும் ஸ்ரீமோகனன் முன்னர் ஊர்காவற்றுறையில் உதவிப் பிரதேச செயலாளராகவும், தெல்லிப்பழை மற்றும் கரவெட்டியில் பிரதேச செயலாளராகவும் கடமையாற்றிப் பின்னர் வடக்கு மாகாணக் கைத்தொழில் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளராகப் பதவி வகித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-66)

**வேலையாட்கள் தேவை**

கொக்குவில் தாவடியில் இயங்கிவரும் பிரபல்யமான நிறுவனத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- அனுபவம் மிக்க மேசன் சம்பளம் - 4000/-
- உதவி மேசன் - 3000/-

076 096 9728



'ஏழாலைச் சிவன்' என அழைக்கப்படும் ஏழாலை புங்கடி சொர்ணாம்பிகை உடனுறை அம்பலவாணேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற் சவத்தின் முத்தேர் பவனி நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை பல நூற்றுக் கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் சிறப்புறவும், பக்திபூர்வமாகவும் இடம் பெற்றது. (ச-66)



பதுளை, எட்டாம்பிட்டிய 2ஆம் பிரிவில் அமைந்துள்ள வள்ளி தெய்வானை சமேத ஸ்ரீ சிவசுப்ரமணிய சுவாமி ஆலய நிர்வாகத்தின் கோரிக்கைக்கு அமைவாக ஆறு இலட்சத்து நாற்பதாயிரம் ரூபா பெறுமதியான புதியதேர் அமைப்பதற்காக முதலாம் கட்டமாக இரண்டு இலட்சம் ரூபா நிதி சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கப் பட்டுள்ளது. (எ-66)

**தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் பிரபல ஸ்ரூடியோ மற்றும் கலர்லாப் ஒன்றிற்கு போட்டோகிராப்பர், கிராபிக் டிசைனர், பிரின்டர் போன்ற பணியிடங்களுக்கு முழு நேர பணியாளர்கள் தேவைப்படுகின்றார்கள். ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு: 077 773 0567, 077 234 9933

**தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு**

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 20 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு.பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். 1 ஏக்கர் 15 இலட்சம்.

தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526

(CS58593)

**Vacancies**

Receptionist, Office Admin, Data Entry, Accounts, Store Keeper, Security Guard, Driver, Manager, Supervisor, IT Officer, Web Developer, Online Admin, Part Time Stafs

Contact: 076 098 4532, 077 773 3368

# சைக்கிள் திருடியவர் மடக்கிப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 3

நீர்வேலிக் கந்தசுவாமி கோயிலடிப் பகுதியில் பூட்டி வைக்கப்பட்ட சைக்கிளைத் திருடிய நபரொருவரை மக்கள் மடக்கிப்பிடித்துள்ளனர். இப்பகுதியிலுள்ள கண்காணிப்புக் கமராமூலம் மாட்டிக்கொண்ட சந்தேக நபரை மக்கள் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (எ-41-17)



பச்சிலைப்பள்ளிப் பிரதேச சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவும் தொழிற்றுறைத் திணைக்களமும் இணைந்து நடத்திய உள்ளூர் உற்பத்திப் பொருள்களுக்கான மாதாந்த விற்பனைச் சந்தை கடந்த திங்கட்கிழமை பிரதேச செயலக வளாகத்தில் நடைபெற்றது. (ச-41-9)

**தவறவிடப்பட்டுள்ளது**

சிங்கராயா ஜெயக்குமார் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (700122280V), வாகன சாரதி அனுமதிப்பத்திரம் என்பன அடங்கிய கைப்பை ஒன்று நேற்று (02.07.2025) புதன்கிழமை காலை 05.00 - 06.00 மணியளவில் பூநகரிக்கும் தனங்கிளப்பிற்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 076 573 9848

## படுகாயமடைந்த...

சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னார் நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஹைஏஸ் வாகனமும், மோட்டார் சைக்கிளுமே இவ்வாறு விபத்துக்கு உள்ளாகியிருந்தன. மோட்டார்சைக்கிளில் மூவர் பயணித்த நிலையில், அவர்கள் அனைவரும் படுகாயமடைந்தனர். ஹைஏஸ் வாகனத்தில் பயணித்த இரு சிறுமிகள் உட்பட ஐவர் காயங்களுக்கு உட்பட்டிருந்தனர்.

மோட்டார்சைக்கிளில் பயணித்த நபர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்ட போது, இடைவழியில் அவர் ஆபத்தான கட்டத்தை அடைந்துள்ளார். இதனால், மாரவில மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் மிருசுவில் பகுதியைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஹைஏஸ் வாகனத்தின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-113)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org